# கிறிஸ்தவத் தமிழ் நாவல்களும் சமுதாய விழிப்புணர்வும்[1]

கலாநிதி ஏ. ஜே. வி. சந்திரகாந்தன் ⊛

பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து தென்னாசிய நாடுகளைத் தமது ஆதிக்கத்திற்குட்படுத்திவந்த மேற்கத்தேய அரசுகளின் அனுசரணையுடன் தமிழகத்தில் புகுந்த கிறிஸ்தவ சமயம், தமிழிலக்கியத்தினது பரிமாண வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க அகற்சியை ஏற்படுத்தியுள்ளது. அகராதிகளை ஆக்குவது முதல், அம்மானைகளைப் பாடுவது ஈறாக, தமிழ் இலக்கண நூல்களை யாத்தலிலும், செந்தமிழ் காப்பியம் புனைதலிலும், நாட்டார் இலக்கிய வடிவங்களை நயம்பட வளர்த்தலிலும், மேலைத்தேய கிறிஸ்தவப் பாதிரிமார்களும், அவர்களைத் தொடர்ந்துவந்த, தமிழகக் கிறிஸ்தவ அறிஞர்களும் செப்பரும் பணியாற்றியுள்ளனர் என்பது செந்தமிழ் இலக்கிய இலக்கண வரலாறு எடுத்தியம்பும் ஓர் உண்மை[1] இவர்களுள் சிலர் ''மறைவளர மொழி வளர்ப்போம்'' என்ற இலட்சியத்துடன் செயற்பட்டனரேயாயினும். பலர் தமிழ் மொழி மீது தாம் கொண்ட தணியாத நாட்டத்தினால் உந்தப்பட்டனர் என்பதும் ஏற்கப்படக்கூடியதே.

கடந்த கால் நூற்றாண்டுகால தமிழிலக்கிய வளர்ச்சியை ஆயும் போது. ஆங்கு நாவல் இலக்கியம் நயத்தகு நிலையில் வளர்ந்திருக்குமாற்றினை அவதானிக்கலாம். இக்கூற்று. ''கிறிஸ்தவ''[2] நாவல் இலக்கியத்திற்கும் பொருந்துமெனக் கூறலாம். தமிழ் நாவல் இலக்கிய வரிசையிலே கிறிஸ்தவ நாவல்களுக்குத் தனிச்சிறப்பு உண்டு. இச்சிறப்பு, கிறிஸ்தவரல்லாத ஆய்வாளர்களினாலும், விமர்சகர்களினாலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.[3]

''கிறிஸ்தவ நாவல்'' என்று கூறும்போது அது கிறிஸ்தவர்களால் எழுதப்படுகின்ற நாவல்கள் மட்டுமே எனக்கொள்ளுதல் தவறானதாகும். கிறிஸ்தவரல்லாதவரும்கூட, கிறிஸ்தவ சமய விழுமியங்களை, கொள்கைகளை, கோட்பாடுகளை உள்ளீடாகவைத்துச் சிறுகதைகளும், புனைகதைகளும், நாவல்களும் யாத்திருக்கின்றனர். அவ்வாறே கிறிஸ்தவ நாவலாசிரியர் பலர் தமது நாவல்களில் பிறசமயப் பெயர்கொண்ட பாத்திரங்ளை அச்சமயங்களின் ஆன்மீக மரபுகளுக்கேற்ப அழகுறத் தீட்டியுள்ளனர்.

எனினும், அரண்மனைகளையும், அந்தப்புரங்களையும் தளமாக வைத்துக் கதைபுனைந்த வேதநாயகம்பிள்ளை முதல், அந்தரித்துத் தெருவில் அலையும் அபலைகளைக் கதாபாத்திரங்களாகத் தீட்டிய ஐசக் அருமை

---

⊛ இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகத் துறையின் தலைவராகவும், சிரேஷ்ட விரிவுரையாளராகவும் பணியாற்றுகின்றார். ''இலங்கையின் பல்சமய பல்கலாச்சார சூழலில் கிறிஸ்தவர்களின் மறைப்பணி'' ''ஆசிய இறையியலின் அண்மைக்கால செல்நெறிகள்'' போன்ற ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வெளியிட்டுள்ளார்.

ராஜன் வரை சமுதாய விழிப்புணர்வையும், அதன்மூலம் ஏற்படவேண்டிய சமுதாய மாற்றங்களையும், அதற்கான தேவைகளையும் வலியுறுத்தியே கதை புனைந்திருப்பதனைக் காணலாம். யதார்த்தப்பண்புடன் பாத்திரங்களைப் படைப்பதும், அப்பாத்திரங்களைப் பேசவிடுவதன்மூலம், சமுதாயமாற்றத்திற்கு வேண்டிய கருத்துக்களை, அறிவுரைகளை உரையாடல்களில் எடுத்துரைப்பதும், அவற்றோடு இயல்பாகவே கிறிஸ்தவ மறைச்சிந்தனைகளை, சித்தாந்தங்களை இணைத்து விடுவதும் கிறிஸ்தவ நாவலாசிரியர் கையாளும் பொதுவான ஓர் இலக்கிய உத்தியாக இருந்துவருகின்றது. ஆயினும் ''கிறிஸ்தவ நாவல்'' என்று இனம் காட்டுவதற்கு, இந்த அளவுகோல்மட்டும் போதுமானதா? கிறிஸ்தவ நாவல் இலக்கியத்தின் சமய, சமூக, சமுதாய அடிப்படை எத்தகையது? கிறிஸ்தவ மறைக் கோட்பாடுகளை, நம்பிக்கைகளை மையமாக வைத்து எழுதப்படும் நாவல்கள் மட்டுமே கிறிஸ்தவ நாவல்களா? தமிழ் நாவல்களில் கிறிஸ்தவப்பெயர் சூட்டப்பெற்ற பாத்திரங்களை அமைத்து அவற்றினூடாக கிறிஸ்தவ சமயக்கோட்பாடுகளைத் தெளிவாக்குவதும் அல்லது அப்பாத்திரங்களினூடே கிறிஸ்தவ படிப்பினைகளை வலியுறுத்துவதும் கிறிஸ்தவ நாவல் என்பதற்கு சான்றாக ஆகிவிடமுடியுமா? கிறிஸ்தவ நாவல்களுக்கென்று தனிப்பெரும் தத்துவார்த்தப்போக்கு ஒன்று இருக்கின்றதா? அல்லது இருக்கவேண்டுமா? தமிழ் இலக்கிய உலகில் ''உரைநடை'' தோன்றிய காலத்திலிருந்தது போல கிறிஸ்தவ சமயப்பிரச்சாரத்திற்காகவும், சமயகோட்பாடுகளை நிலைநிறுத்தவுமே கிறிஸ்தவ நாவல்கள் எழுதப்படுகின்றனவா? கிறிஸ்தவ நாவல்களுக்கு தனித்துவம் வாய்ந்த உலகநோக்கும், சமுதாயக் கணிப்பும் இருக்கின்றதா? அப்படி இருக்குமாயின், ஏனைய சமயத்தவரால் எழுதப்படும் தமிழ் நாவல்களினின்றும் இவை எவ்வாறு வேறுபடுகின்றன? இவையும், இவைபோன்ற ஏனைய கேள்விகளுக்கும் தமிழ் நாவல் இலக்கிய வளர்ச்சியின் வரலாற்றுப் பின்னணியிலும், கிறிஸ்தவ நாவல்களின் இன்றியமையாத அம்சமாக விளங்கும் ''சமுதாய விழிப்புணர்வுக் கண்ணோட்டத்தின்'' ஒளியிலும் பதில் கொடுக்க முனைவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## 1. தமிழ் நாவல் இலக்கியத்தின் தோற்றமும், வளர்ச்சியும்

ஒரு நூற்றாண்டுக்கும் மேலான வளர்ச்சியினைக் கண்டுள்ள தமிழ் நாவல் இலக்கியத்தின் முன்னோடி எனக் கொள்ளப்படுபவர் மாயூரம் வேதநாயகம்பிள்ளை (1826 - 1889) ஆவார். இவரது படைப்பான ''பிரதாப முதலியார் சரித்திரம்'' 1879 இல் நாலுருப்பெற்று வெளியிடப்பட்டபோது இந்நூலாசிரியர் இதனை ''உரைநடை நவீனம்''[4] என்று அழைத்திருந்தார். தமிழ் நாவல் இலக்கியத்தின் வரலாறு இந்நூலுடன் ஆரம்பமாகின்றது என்பது குறிப்பிடப்படவேண்டியதே. தமிழில் ''உரைநடை'' இலக்கியத்தின் தேவையுணர்ந்து யாக்கப்பெற்ற இந்நூல், எண்ணற்ற கிளைக்கதைகளையும் மேலைத்தேய, கீழைத்தேய வரலாற்று, பண்பாட்டுக் குறிப்புகளையும் நூலாசிரியர் வாழ்ந்த காலத்திற்கேற்ற சமூக மாற்றத்தையும் சீர்திருத்தத்தையும் வலியுறுத்தும் பல்வேறு அறிவுரைகளையும் அடக்கிய ஓர் கற்பனைப்படைப்பாகும். கிறிஸ்தவ நாவல் ஆசிரியராகக் கொள்ளப்படும் வேதநாயகம்பிள்ளை அவர்கள் யாத்த இந்நூலினை ஓர்

கிறிஸ்தவ நாவல் எனக் கொள்ளமுடியாதேயாயினும், இந்நூலிலே கிறிஸ்தவ ஆன்மிக சார்புடைத்தான அறிவுரைகளையும் ஆங்காங்கு காணலாம். ''சரித்திரம்'' எனும் பெயரினை ஆசிரியர் இந்நூலுக்குக் கொடுத்திருப்பினும் ஒருவித சுயசரிதைப்போக்கிலமைந்த, நகைச்சுவை நிறைந்த, கற்பனை வளம்கொண்ட ஓர் நாவல் இலக்கியப் போக்கினையே இந்நூலில் கண்டு தெளிதல் கூடும்.

இந்திய உபகண்டத்தில் வழக்கிலிருந்த பல்வேறு பண்பாட்டுக் கூறுகளினாலும், பன்மறை ஊடுருவல்களாலும் உந்தப்பெற்று, பல நூற்றாண்டு கால பரிணாம வளர்ச்சிபெற்ற தமிழ் பாரம்பரியத்தினதும், பண்பாட்டினதும் உயர்ந்த சில விழுமியங்களை உள்வாங்கி, அவற்றைத் தமது படைப்பினுள் இயற்கைப்பொலிவுடன் இணைத்துள்ள வேதநாயகம்பிள்ளை அவர்கள், தமது நாவலினூடாகத் தாம் வாழ்ந்த காலத்திலும், அதற்கு முன்னும் தமிழ்நாட்டில் நிலவிவந்த கலாசார வழமைகளையும், மற்றும் சமய, பண்பாட்டு நம்பிக்கைகளையும், இலக்கிய நயத்துடன் இயம்பியிருப்பதனைக் காணலாம். அதேவேளை, தமது சமுதாயத்திலே சீர்திருந்தி முன்னேறவேண்டிய அம்சங்களைச் சுட்டிக்காட்டி, அவற்றை மாற்றுவதற்கான வழிமுறைகளையும்கூறி, அதற்கேதுவாகத் தமது இலக்கியப்படைப்பு ஆக்கப்பட வேண்டுமென்ற ஆர்வத்தில் அவர் செயற்பட்டிருப்பது அவரது படைப்பில் தெளிவாகக் காணக்கிடக்கின்றது.[5]

செந்தமிழ் மொழியையும், அதன் பல நூற்றாண்டு பாரம்பரியங்களைக் கொண்ட இலக்கியக் களஞ்சியத்தையும், நாவல் இலக்கியம் அணிசெய்ய ஆரம்பித்தது ஒரு நூற்றாண்டுக்குச் சற்றுக்கூடவேயாயினும், இன்றைய தமிழிலக்கியப்படைப்புகளில் நாவலின் செல்வாக்கு செழுமையும், செழிப்பும் பெற்றுவருவது கண்கூடு. தமிழிலக்கிய வரலாற்றினைப் பின்னோக்கிப் பார்க்கும்போது, இலக்கிய வடிவ வரிசையில் பிந்திவந்த நாவல் இலக்கியம், அதற்கு முன்னிருந்த இலக்கியப் படைப்புகளையெல்லாம் முந்திக்கொண்டு, எண்ணக் கணக்கிலும், எண்ணுக்கணக்கிலும் தற்காலத் தமிழ் இலக்கிய உலகில் வீறுநடை போடுவது வியப்புக்குரியதன்று.[6]

உரைநடை இலக்கியமே, உலகோர் இன்று உவந்து ஏற்கும் இலக்கியம் என்பதற்கு இவ்வுலகில் வழங்கிவரும் பல்வேறு மொழிகளில் அறாத் தொடர்ச்சியாக அச்சுவாகனம் ஏறிவரும் ஆயிரக்கணக்கான குறுநாவல்களும், நாவல்களுமே சான்றாகும். இதுதவிர, இன்றைய உலகில் நாவல் இலக்கியமும், அதனை வளம்படுத்திவரும் உரைநடைப் படைப்புகளுமே உயர்ந்தோங்கி நிற்கின்றன என்பதற்கு உலகின் பல மொழிகளிலும் நாள்தோறும் வளர்ந்து வரும் நாளிதழ்களும், வார இதழ்களும், சஞ்சிகைகளும், இவற்றைத் தளமாகக் கொண்டு வளரும் சிறுகதை, தொடர்கதை வடிவங்களும் சான்றாக அமையும். நவீனத்துவத்தின் வெளிப்பாடாக விளங்கும் நாவல் இலக்கியம், தமிழிலக்கியத்தின் பரிமாண வளர்ச்சிக்கு ஒருவித புதுமைப்பொலிவும் சமூக வலிவும் கொடுத்து வருகின்றதென்பது, இலக்கிய விமர்சகர்கள் அனைவரினாலும் ஏற்கப்படுகின்றதொன்று.

NOVELLUS என்ற இலத்தீன் பதத்தினை அடியொற்றிவந்த NOVEL என்ற ஆங்கிலச்சொல் தமிழில் 'நாவல்' என்ற பதமாக வழங்கி வருகின்றது. இம்மூன்று மொழிகளிலுமே இப்பதம் நவீனம், புதுமை, புதி

யவை போன்ற கருத்துப்படிவங்களை உள்ளடக்கியுள்ளதென்பது தெளிவு. நவீனத்துவத்தின் விளைபொருளாக விளங்கும் நாவல் இலக்கியம், புதுயுகத்தின் சில போக்குகளை ஆரம்பத்திலிருந்தே பிரதிபலித்து வந்துள்ளதென்றும், சமுதாய மாற்றங்களினதும் அந்த மாற்றங்களுக்கான தேவைகளினதும தவிர்க்கமுடியாத உந்துதலினாலேயே நவீன வடிவமாகிய நாவல் படைக்கப்படுகின்றதென்பதும் நாவல் இலக்கிய ஆய்வாளரின் ஆணித்தரமான கருத்தாகும் 7

நவீன இலக்கியங்களினதும், குறிப்பாகத் தற்காலத் தமிழ்நாவல் இலக்கியங்களினதும் சமுதாய நோக்குபற்றிய ஆய்வாளரினதும், முற்போக்கு விமர்சகர்களினதும் கருத்துக்களை இவ்விடத்தில் கூறுதல் தகும்.

## 2. விமர்சனத்தால் வளரும், இலக்கியத்தின் சமுதாய நோக்கு

இருபதாம் நூற்றாண்டில் துரிதமான வளர்ச்சியும், வளமும் பெற்ற சில முற்போக்கு இலக்கியப்பண்புகளில் மிகவும் முதன்மையானதாகப் போற்றப்படுவது இலக்கியத்தின் சமூக - சமுதாய சார்பாகும். நவீன முற்போக்கு இலக்கியத்தினதும் முனைப்பான கோட்பாடாகக் கொள்ளப்படுவது இலக்கியம், சமுதாயம் பற்றிக்கொண்டிருக்கும் இயக்கநிலைவாதக் கருத்துக்களும், நிறைவான சமுதாய மாற்றத்திற்கு அவைகாட்டும் வழிகளுமேயாகும். இவ்வடிப்படையிலேதான் இன்றைய இலக்கியப் படைப்புகள் முற்போக்கு வகையினைச் சார்ந்ததா? இல்லையா? எனத் தரநிர்ணயம் செய்யப்படுகின்ற ஒரு நிலையையும் ஆய்வாளர் மத்தியில் நாம் காண்கிறோம்.8 இலக்கியத்தின் வரலாறு, இலக்கியப் படைப்புக்களின் காலவரண்முறைப்பட்ட அட்டவணை என்று கொள்ளாது; இலக்கியமும் வரலாறும் ஒன்றிணைந்தநிலையில் சமுதாயத்தின் பிரச்சினைகளை, அமைப்புக்களை, தத்துவார்த்தப் போக்குகளை யதார்த்தமாகப் பிரதிபலிக்கின்றபோது, அவ்விலக்கியமானது தான், சார்ந்திருக்கும் வரலாற்றின் வளர்ச்சிப்படிகளின் வெளிப்பாடாகிறது. பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப்பிடுவதுபோல ஒருநாட்டின் அல்லது சமுதாயத்தின் வரலாற்றினை அதன் இலக்கியவழி நின்று நோக்குவது இலக்கிய வரலாறாகின்றது.9

சமுதாயத்தின் ஓர் அங்கம் என்ற அளவில் இலக்கியப் படைப்பாளி, தான் சார்ந்திருக்கின்ற சமுதாயத்தின் மதிப்பீடுகளை, தத்துவங்களை, நம்பிக்கைகளை, ஏதோ ஒரு அளவிலும் வகையிலும் தனது இலக்கிய ஆக்கத்தில் தெளித்துவிடுகின்றான். தொன்று தொட்டு தமிழ் கூறும் நல்லுலகம் பாராட்டிப்புகழ்ந்து வரும் தொல்சீர் இலக்கியங்கள் முதல் இன்றுவரை, ஜனரஞ்சகமாக ஏற்கப்பட்டுவரும் நாவல் இலக்கியம் ஈறாக இக்கூற்று பொருந்தும் எனலாம். ஆயினும் கடந்த சில தசாப்தங்களாக பல்வேறு வரலாற்று நியதிகளால் உந்தப்பட்டு மேலோங்கிவரும் 'சமுதாய விழிப்புணர்வு'' சமுதாய அமைப்பின் ஏனைய இயக்க அங்கங்களாகிய சமயம், அரசியல், பொருளாதாரம், கல்வி, கலாசாரம் ஆகியவற்றில் பெருமளவு மாற்றத்தைப் புகுத்தியிருக்கின்றது. எனவேதான் சமுதாயத்திலிருந்து ஒதுங்கிய நிலையில் இன்று படைக்கப்படும் இலக்கியங்கள், இறந்த இலக்கியங்களாகவும், சமுதாயத்தின் இயக்கநிலை உயிரோட்டத்தோடு இணைந்து செல்லும் இலக்கி

யம், வாழும் இலக்கியமாகவும் கொள்ளப்படுகின்றது. சமூகவியல் கோட்பாடுகளின் அடியாக எழுந்த நவீன இலக்கிய விமர்சனமே பின்னபதன் உயிர்நாடியாகக் கொள்ளப்படுகின்றதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இங்குதான் முற்போக்கு இலக்கியத்தின் அடிப்படையும், ஆதாரசுருதியுமாக இருக்கின்ற ''இலக்கிய விமர்சனமும்'' அதனை அறிவியல், விஞ்ஞான நோக்கினில் ஆக்கித்தரும் திறனாய்வாளர்களினது அளப்பரிய யங்களிப்பும் இனம் காட்டிப் போற்றப்பட வேண்டியதாகின்றது. ஏனெனில் முற்போக்குச் சிந்தனைகளை முன்வைத்த இலக்கிய விமர்சகர்களே இன்றைய நாவல் இலக்கிய வளர்ச்சியை ஆற்றுப்படுத்தியவர்களாவர்.[10]

தமிழகத்திலும், இலங்கையிலும் இன்று வளர்ந்துவரும் ஆக்க இலக்கியப் படைப்புகளை ஆரோக்கியமான திசையில் ஆற்றுப்படுத்தி வளரச் செய்த பெருமை நவீன இலக்கிய விமர்சகர்களையே சாருமென உறுதியுடன் கூறலாம் முற்போக்கு இலக்கியத்தின் முனைப்பான, முதன்மையான பண்பு அதன் ''சமுதாய விழிப்புணர்வு''ப் போக்காகும். சமுதாய மாற்றத்திற்கு ஆதரவு தந்து அதனை நெறிப்படுத்தும் சக்தி வாய்ந்த சாதனமாக இலக்கியம் கொள்ளப்படுதல் வெறும் தற்செயல் நிகழ்வு அல்ல. இன்றைய அறிவியல் துறைகளில் பலவற்றை ஆழமாக ஊடுருவிவரும் ''சமூகவியல்'' ஆய்வறிவின் தூலமான விளைவுகளே இலக்கியத்தின் மீது இத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றன என்பதனையும் மனங்கொள்ளுதல் அவசியமானது. இலக்கியத்தின் இலக்கு வெறும் ரசனையும், பொழுதுபோக்குமல்ல மாறாக சமுதாய மாற்றத்தை ஏற்படுத்தும் விழிப்புணர்வைத் தூண்டுவதே என்ற கோட்பாட்டை இவர்கள் முழுமனதுடன் முன்வைத்தனர்.

## 3. தமிழ் நாவல் இலக்கிய வளர்ச்சியில் ஐரோப்பிய பண்பாட்டின் செல்வாக்கு

இது ஒருபுறமிருக்க, இலக்கிய வரலாற்றினை அதன் வடிவங்களின் வளர்ச்சி நிலைநின்று நோக்கும்போது; இந்திய உபகண்டம், ஐரோப்பியரின் ஆக்கிரமிப்புக்கும், ஆதிக்கத்திற்கும் உள்ளாக முன்பு, அங்கு எழுந்த இலக்கியங்களின் உள்ளடக்கங்கள் இந்தியாவில் வழக்கிலிருந்த பன்மொழி, பல்கலாச்சார, பல்சமய உறவுகட்கும், தாக்கங்கட்கும் உட்பட்டிருந்ததேயாயினும், அகில இந்தியரீதியிலே இவை சுட்டிக்காட்டத்தக்க புதிய இலக்கிய வடிவங்களைத் தோற்றுவித்ததற்கான ஆதாரம் எதுமில்லை. இந்தியாவின் வடபுலத்திலெழுந்த வால்மீகியின் இராமாயணத்தைக் கருவாகக் கொண்டு உருப்பெற்ற கம்பராமாயணமும், பௌத்தமதத்தை ஏந்தி எழுந்த சாத்தனாரின் மணிமேகலையும், அவை எழுதப்பெற்ற காலத்தில் வழக்கிலிருந்த இலக்கியவடிவ வரம்புகட்குட்பட்டே வார்க்கப்பட்டிருக்கின்றன. இந்த அருந்தமிழ் இலக்கியங்கள் இந்தியாவின் பல்சமய பன்மொழித் தாக்கங்களுக்குட்பட்டிருப்பினும், கவிதை, காப்பியம் என்ற பாரம்பரிய இலக்கிய வரம்புகட்குமேல் அவை வடிந்துசெல்லவில்லை இது அக்கால இலக்கியவடிவ வரலாற்றின் நியதி மட்டுமல்ல; அப்போது வழக்கிலிருந்த கல்விமுறையினதும், புலமை மரபினதும் நியதியுமாகும்.

ஐரோப்பிய அரசுகளின் அணைவோடு ஆசியாவை வந்தடைந்த கிறிஸ்தவம், அதன் சமயத்தேவைகளை நிறைவு செய்வதற்காக வேண்டி ஆரம்பித்த சமய, மொழி, கலாச்சார உறவுகளின் விளைபொருட்களாகவே பல புதிய இலக்கிய வடிவங்கள் பரிணமித்தன. இவை ஐரோப்பிய துறவியரின் சமயப்பிரச்சார ஆர்வத்துடன் இணைந்து கலந்த நிலையிலேயே இன் தமிழ் இலக்கிய உலகையும் வந்தடைந்தன. ஐரோப்பிய இலக்கியத்தில் பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டுகளிற் புகுந்த உரைநடை இலக்கிய மரபு இலக்கியப் படைப்புகளை ஜனரஞ்சகப்படுத்தியது என்பதிலும் பார்க்க அதனை ஒரு சமுதாய நுகர்பொருளாக ஆக்கியது என்பதே இங்கு பொருத்தமானதாகும். சுருங்கக்கூறின், ''பத்தொன்பதாம் நூற்றாண்டில் பருவமெய்திய தமிழ் உரை நடைவடிவம்'' தமிழ் இலக்கியத்துறையின் களத்தையும், தளத்தையும் விரிவுபடுத்தியதோடல்லாமல் 'நாவல்' என்ற நவீன இலக்கியம் முன்னேறிச் செல்ல வாய்க்காலாகவும் வழிசமைத்துக் கொடுத்தது.

ஐரோப்பியர்கள் தமது காலனித்துவ தேவைகளின் அடிப்படையிலமைந்த கல்விமுறையினையே தென்னாசியாவிலும் ஆரம்பித்தார்கள். தென்னாசியாவில் ஆங்கிலேயரின் ஆதிக்கம் ஸ்திரப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, ஆங்கிலேய அரசின் உதவியுடனும் ஐரோப்பியக் கிறிஸ்தவ மத போதகர்களின் செயலூக்கத்துடனும் இக்கல்வி முறை வளர்ந்தது. நிலமானிய அமைப்புநிலை ஆதிக்கம் விரவிவளர்ந்த தென்னாசிய சமுதாயப் பரப்பினில் இக்கல்விமுறை, பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்தே சுட்டிக்காட்டத்தக்க விளைவுகளை ஏற்படுத்தியது.[11] 1835 இல் சேர் மக்கோலே (Macaulay) என்பவர், அகில இந்தியாவின் உயர்கல்வியின் ஊடகமாக ஆங்கிலமொழி அமையவேண்டுமெனக் குறித்துவைத்ததும், அதைத் தொடர்ந்து, 1857 இல் பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய இடங்களில் பல்கலைக்கழகங்கள் அமையப்பெற்றதும் இங்கு மனங்கொள்ளப்படவேண்டும். ஆங்கிலேயர் ஆரம்பித்த இக்கல்வி அமைப்பு முறைமைகளும், அதனை அடியொற்றிவந்த அரசவேதனம் பெறும உத்தியோகங்களும், தென்னாசியாவல், குறிப்பாக இந்தியாவில் ஒரு புதிய மத்திய வகுப்பினரைத் தோற்றுவித்து, மரபுவழி சமுதாய அமைப்பிலே புதிய மாற்றங்கள் ஏறபடுவதற்கு ஏதுவாகியது. இதுவரை நிலவிய நிலப்பிரபுக்களின் ஆதிக்கத்திற்கு, பொருளாதாரரீதியான புதிய சவால்களாக ஆங்கிலேய அரசின் வளர்முக நிர்வாகத்தின் நிலையான வேதனம் பெறுகின்ற வளர்ச்சிமுறைகொண்ட புதிய மத்திய வகுப்புக்கூறுகள் எழுந்தன. இதனை மனங்கொண்டே ''கல்வி அறிவுபெற்ற நடுத்தர வர்க்கத்தினரின் தோற்றத்துடனேயே நாவல் இலக்கியமும் முகிழ்த்தது''[12] என்று பேராசிரியர் கைலாசபதி கூறுவது சாலப் பொருந்துவதாயுள்ளது.

## 4. ஆரம்ப காலக் கிறிஸ்தவத் தமிழ் நாவல்களின் சமுதாய நோக்கு

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கச்சேரி, தஸ்தாவேஜு காப்பாளராக அமைந்த வேதநாயகம்பிள்ளை அவர்களும், இந் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே கிறிஸ்தவ நாவல் இலக்கியத்திற்குப் பாதை கற்றுக்கொடுத்த

மாதவையரும் (1872 - 1925) அவரது சமகாலத்தவரான நெய்யூர் அருமைநாயகமும் (1858 - 1914) மத்திய வகுப்பினரின் வாழ்க்கைப் பிரச்சினைகளைப் பின்புலமாகவைத்துத் தம் நாவல்களை எழுதினர். இவர்கள் ஆங்கிலேய அரசின் கல்வியமைப்பின் கனிகள் மட்டுமல்ல, அதே அரசின் கீழ் உயர்ந்த உத்தியோகம் பார்த்தவர்கள் என்பதனை அறியும் போது, இவர்களது கதைகளின் களம் இன்னும் துலக்கமடைகின்றது. அதாவது தாம் சார்ந்திருந்த மத்திய வர்க்கத்தினரின் சமய - சமூகப் பிரச்சினைகளையும் கிறிஸ்தவ சமயப் பிரச்சாரத்தினாலும், அதை ஒட்டி எழுந்த சமயமாற்றம், கலப்புத் திருமணப், பண்பாட்டு முரண்பாடு மேற்கத்தேய நாகரிக நாட்டம், போன்றவற்றையும் பின்புலமாகக் கொண்டே இவர்கள் நாவல்களை எழுதினார்கள். மேற்கத்திய நாகரிகத்தின் சில கூறுகளை ஏற்று அதன் வழியாகத் தமிழ்ப் பண்பாட்டினை வளமாக்கலாம் என்றும், சமுதாய ஏற்றத்தாழ்வுகள் நாளடைவில் சீராய் விடும் என்றும் எண்ணிய இவர்கள் சமுதாயத்தின் அடி மட்டத்தில் வாழ்கின்றவர்களின் அடிப்படைப் பிரச்சினைகளையறிந்து அதை மாற்ற வழிதேடினார்களா என்பதும் ஆய்வுக்குரியதே. தமது காலத்தை ஓரளவேனும் கடந்த நிலையில் சிந்தித்த இவர்களின் கற்பனையில் காலத்திற்குக் கட்டுண்டு கதைபுனைந்த இரண்டக நிலையையும் காணமுடிகிறது.

இவை தவிர. ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட கல்வி, தொழினுட்ப மாற்றங்கள் ''நாவல் இலக்கியம்'' முன்னேறி வளர முக்கிய காரணிகளாக அமைந்தன. கையெழுத்துப் பிரதியைப் பல பிரதியாக்கம் செய்யும் அச்சியந்திரங்களும், பாடசாலைக் கல்வியினை அடியொற்றி நூல்களை வாசித்து அறிவைப் பெருக்குவதற்கான தேடலும், ஆர்வமும் நாவல் இலக்கியத்தின் வளர்ச்சிக்கு நல்லதொரு சூழலைப் பிறப்பித்தன. இந்தசூழலில் இவர்களது படைப்புகளைத் தமிழ்ச் சமுதாயம் வரவேற்றது வியப்புக்குரியதன்று. தமிழ் நாவல் இலக்கியத்தின் ஆரம்பவரலாற்றில் மாதவையரின் படைப்புகள் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளதென்பது நாவல் இலக்கியத்தைப் பின்னோக்கிப் பார்ப்பவர்கள் புரிந்துகொள்ளக்கூடியதொன்று. ஆயினும் கிறிஸ்துவின் போதனைகளின் சாரத்தை நன்கு உணர்ந்த நிலையிலும், அந்த சமயத்தின் சமுதாய நிலைப்பாடுகளைத் தெளிந்த நிலையிலும் இவர்கள் எழுதினார்களா என்பது கேள்விக்குரியதே. தனது காலத்தில் சரமாரியாக நிகழ்ந்த கிறிஸ்தவ சமயப் பிரச்சாரங்களையும், அதனைச் சார்ந்து நின்ற சமய மாற்றத்தையும் ஒட்டி எழுந்த பல சமய, சமூகக் கலாச்சாரப் பிரச்சனைகளும் துல்லியமான, துலக்கமான வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் இவரது நாவலில் இடம் பெறுவதினைக் காணலாம். அவ்வாறே சமயப்பரம்புதல் நோக்குடன், கிறிஸ்தவப் பாதிரிமார் ஆற்றிய சமூகப் பணிகளையும், ஏனைய பொதுப் பணிகளையுமே இவர் கிறிஸ்தவத்தின் வாழ்க்கை முறையின் முக்கிய அம்சங்கள் எனக் கொண்டார் என்ற உண்மை, சமயம் மாறிய ''கிளாரிந்தா''[13] ஆற்றிய ''பல்வேறு சமூக - சமயப் பணிகளின்'' ஒளியில் துலக்கமடைகின்றது. பழமை வாதத்திற்கும், புதுமை ஆர்வத்திற்குமிடையிலான போராட்டங்களை இந்திய வரலாறு, கலாச்சார, சமுதாய பின்னணியில் இவர் சித்தரிப்பது போற்றுதற்குரியது. இவரது நாவல்களுள் ''பத்மாவதி சரித்திரம்'' மற்றும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுப் பின் தமிழில் பெயர்க்கப் பெற்ற ''கிளாரிந்தா'', ''சத்தியானந்தன்'' ஆகிய நாவல்கள், இந்தியாவில் கிறிஸ்தவ சமயத்தின் வருகையினால் ஏற்

பட்ட சமுதாய, கலாச்சார மாற்றங்களையும், சிக்கல்களையும் மனங் கொண்டு எழுதப்பட்டவை என்பதனையும் இந்நாவல்களின் உள்ளடக்கம் ஊகத்திற்கிடமின்றி உறுதிப்படுத்துகின்றது.

மாதவையரின் சமகாலத்தவரான நெய்யூர் அருமைநாயகம் என் பவரின் கிறிஸ்தவ நாவல்களுள் குறிப்பாக ''மூடினமுத்து'', ''மீதி இருள்'' போன்றவை, இன்று வரை செல்வாக்குப் பெற்றவையாகும். நாவல் ஆசிரி யரின் காலத்தில் வழக்கிலிருந்த தமிழ்ப் பழமொழி வழமைகளும், உவ மான, உவமேயங்களும் இங்கு பொருள்படத் தேக்கிவைக்கப்பட்டுள்ளன. ஆசிரியரின் 'மீதி இருள்'' என்ற நாவலில் புதிய ஏற்பாட்டு நூல்களின் அடிப்படையிலமைந்த ஆழ்ந்த இறையியல் கருத்துக்களும், சமய அறிவு ரைகளும், நாவலின் கதை இயல்போடு ஒத்தவகையிலே இணைக்கப்பட்டி ருப்பது இவரது சிறப்பு அம்சங்களுள் ஒன்றாகும். இவரது காலத்திலிருந்து இந்தியா சுதந்திரம்பெற்ற காலம் வரையில் எழுதப்பட்ட நாவல்களில் ஒரு சில மேற்கத்திய நாவல்களின் தழுவல்களாகவும், ஆங்கில நாவல்களின் மொழி பெயர்ப்புகளாகவுமே அமைந்தன. இந்தியா விடுதலை பெற்று, ஏறத்தாள ஒரு தசாப்தத்தின் பின்னரே கிறிஸ்தவத் தமிழ் நாவல்கள் தமக்கே உரிய தத்துவார்த்தப் போக்குடனும், சமய ஞான ஒளியில் சமு தாய மாற்றத்தையும், அதற்கான தேவையையும் விளக்கியும், விதந்தும் கூறும் பணபினையும் பெற்றன. இக்காலத்தில் நாவல்களும், நாவல் ஆசிரி யர்களும் எண்ணுக் கணக்கில் வளர்ந்ததோடல்லாமல், அவர்களின் எண் ணக் கருவூலங்களும் ஒரு புதிய ஆழத்தையும் அழுத்தத்தையும் பெற்று வந்திருப்பதனை அவதானிக்கலாம்.

## 5. முற்கால நாவல்களும் இக்கால நாவல்களும்

இக்காலத்தில் கிறிஸ்தவ ஆசிரியர்களால் புனையப் பெற்ற சிறு கதைகளும, பெருங்கதைகளும் ஏராளமானவை. ஆயினும் தமிழகத்திலும், இலங்கையிலும் திறனாய்வாளர்கள் பலரின் பாராட்டைப் பெற்றதோடல் லாமல்,[14] தமிழகததின் தலைசிறந்த நூலாசிரியர்களோடு ஒப்பிட்டுப் போற் றக் கூடிய அளவுககு உயர்ந்தோர் பலர். ஜெகசிற்பியன், ஹெப்ஷிபா ஜேசுதாஸன், டேவிற் சித்தையா, டீ. செல்வராஜா, ஐசக் அருமைராஜன், பீ. ஏ. தாஸ், லெயோ யோசப், சாமிமுத்து, செல்வம் சின்னச்சாமி, பொ. ம. இராசமணி, ஜோசப் பிலிப், மேரி மாசிலாமணி, பாபு மனோ கரன், தியடோர் போன்றோரின் நாவல்கள் சீரிய சமுதாய நோக்கையும், குறிப்பாக, சமுதாயத்திலே ஒதுக்கப்பட்டு, ஒடுக்கபபட்டு வருவோரின் வாழ்க்கைப் போராட்டங்களையும் வாழ்க்கையின் அன்றாட நிகழ்வு அடிப் படையில் சித்தரிப்பதனையும் காணலாம்.[15] வரலாற்று நியதிகளால் உந் தப்படும் இவர்களது நாவல்களின் கதைவளமும், பாத்திரப்படைப்பும், வளரவேண்டிய ஒரு சமுதாயத்தில் ஏற்படுகின்ற ''கீறல்களையும்'' ''அழுக் குகளையும்''[16] வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதன் மூலம் நிகழ்கால வாழ்வின் சமுதாய நிலைப்பாடு பற்றிய ஒரு புதிய விழிப்புணர்வினைத் தாற்றுவிக்கின்றன.

இங்குதான் இந் நூற்றாண்டின் முதற்காலில் எழுந்த கிறிஸ்தவ நாவல்களுக்கும், மூன்றாம் காலில் எழுந்த நாவல்களுக்கும் இடையிலுள்ள வேறுபாடுகள் துலக்கமடைகின்றன. முதற்காலிலெழுந்த நாவல்கள் சமுதாயமாற்றத்தை ஆர்வத்துடன் வரவேற்றன. ஆன்மீகக் கோட்பாடுகளையும், படிப்பினைகளையும் இயல்புக்கேற்றவகையில் நாவலில் உள்ளடக்கின. ஆனால் சமுதாயத்தின் அனைத்து மட்டங்களையும் தொடாத அந்த மாற்றம் சிறியதேயாயினும், நிறைவானது எனச் சொல்வதற்கில்லை. மாற்றம் பெற வேண்டிய ஒரு சமுதாயத்தின் பலவீனங்களைச் சுட்டிக்காட்டிய இந்நாவல்கள் அச் சமுதாயத்தினை மாற்றுவதற்கான விருப்புணர்வினைத் தூண்டியதாகத் தெரியவில்லை. சாதி, இனப்பாகுபாடுகள், சீதனச் சீர்கேடுகள், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற உணர்வுகளை அவற்றின் யதார்த்தச் சிக்கல்களுடன் பிரதிபலித்திருப்பினும், இவற்றை மாற்றுவதற்கான மார்க்கத்தைத் தந்துதவியதாகத் தெரியவில்லை. ஆனால் இந்தியாவின் விடுதலைக்குப் பின் கிறிஸ்தவ நாவல் ஆசிரியரால் எழுதப்பெற்ற தமிழ் நாவல்களில் சமுதாயத்தின் அடிமட்டத்தில் வாழும் மக்கள் அனுபவிக்கும் அவலங்களும், அவர்கள்மேல் அடுக்கடுக்காகத் திணிக்கப்படும் ஒடுக்குமுறைகளும், அதனின்றும் அவர்கள் விடுதலை பெறக்கூடிய மார்க்கங்களையும் கூறும் படைப்புக்களே முக்கியம் பெற்று வருகின்றன. இது இலக்கிய ஆய்வாளரின் ஒருமித்த கருத்தாகும்.[17]

கிறிஸ்தவத்தைப் பொறுத்தவரை இது வெறும் தற்செயல் நிகழ்வு அல்ல. இன்றைய கிறிஸ்தவத்தின் பன்முகப்பட்ட வாழ்வுப் பின்னணியிலேயேயும், சமுதாயம், அரசியல், பண்பாடு பற்றிய அண்மைக்கால கிறிஸ்தவ படிப்பினைகளின் ஒளியிலேயும் இது விளங்கவும், விளக்கவும், திறனாய்வு செய்யப்படவும் வேண்டும். அண்மைக்காலக் கிறிஸ்தவத் தமிழ் நாவல்களில் அதிகமானவை கிறிஸ்தவத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை நன்கு தெரிந்த, உணர்ந்த நிலையிலேயே வார்க்கப்படுகின்றன. ஹெப்ஷிபா ஜேசுதாஸனின் 'புத்தம் விடு', டீ. செல்வராஜின் 'மலரும் சருகும்' ஐசக் அருமைராஜனின் 'கீறல்கள்' ''அழுக்குகள்'' போன்ற நாவல்களில் இக்குரல் தெளிவாகவே தொனிக்கிறது என்பதனை அவதானியாமலிருக்க முடியாது.

தற்காலக் கிறிஸ்தவத் தமிழ் நாவல்களின் தத்துவார்த்தப் போக்குகளையும், சமுதாய விழிப்புணர்வை அவை இடைவிடாமல் தூண்டுவதற்கான காரணிகளையும், தென்னாசியாவில் கிறிஸ்தவ சமயம் இன்று ஏற்று வரும். புதிய பரிணாம வளர்ச்சிக் கூறுகளின் ஒளியில் தெளிதல் அவசியம். ஐரோப்பிய அரவணைப்பில் கிறிஸ்தவம் வாழ்ந்த காலத்தில் எழுதப்பட்ட தமிழ் நாவல்களுக்கும், காலனித்துவ ஆட்சி மங்கி மறைந்த பின் இன்றைய வரலாற்றுச் சூழலில் எழுதப்படும் நாவல்களுக்கும் பாரிய வேறுபாடு உண்டு. கிறிஸ்தவம் தவிர்ந்த ஏனைய சமய கலாச்சார எழுச்சிகளின் மத்தியில், அதுவும் கிறிஸ்தவம் தனக்குத்தானே ஒரு சமய பண்பாட்டுநெறியையும், படிமத்தையும் வளர்த்து ஏனைய பண்பாட்டு அம்சங்களை உள்வாங்கி தனக்கென ஒரு தனித்துவமிக்க சாயலை ஏற்படுத்த முனையும் இவ்வேளையில் இத்தகைய ஆய்வு நோக்கு அவசியமானதுமாகும்.

சமய நியதியின் அடிப்படையில், கிறிஸ்தவம் ஒரு பன்நாட்டு மதம். ஏனைய நாடுகளில் இம்மதம் எதிர் நோக்கும் பிரச்சினைகளும், யதார்த்த

உலகுடன் அவை கொண்டிருக்கும் உறவுகளும் கிறிஸ்தவத்தின் உள்ளும், புறமும் பல மாற்றங்களைத் தோற்றுவிக்கின்றன. இவ்வுலகின் இயக்கவியல் நிலைக்குட்பட்ட மாற்றங்களை உணர்ந்த நிலையிலேதான் கிறிஸ்தவமும், அகில உலக ரீதியில் மாறிவருகின்றது. நவீன உலகின் தேவைகளையும், புதிய மாற்றங்கட்கான ஏதுக்களையும் சமய தனித்துவம் குன்றாதநிலையில் அது உள்வாங்கி மாற்றம் பெற முயல்கின்றதென்பது தெளிவு, இவ்வுலகில் வாழும் மனிதர்களில் 'வளரும் சமயம்' என்ற நிலையில் இத்தகைய மாற்றங்கள் சாதாரண வளர்ச்சிப் பரிணாமத்திற்கு உட்பட்டவையே. தென்னாசியாவில் வாழும் திருச்சபைக் குழுமங்களும், இத்தகைய மாற்றங்கட்கு முகங்கொடுத்து வருகின்றதென்பது உண்மை ஆயினும் கிறிஸ்தவ சமயமும். தென்னாசிய சமுதாயமும் எவ்வாறு ஒன்றை ஒன்று ஏற்று அன்றேல் விலக்கி வருகின்றதென்பது ஆய்வுக்குரியது. இந்த இரண்டக நிலை கிறிஸ்தவத் தமிழ் நாவல்களில் பல்வேறு உருவகநிலைகளில் பிரதிபலிக்கப்பட்டுள்ள போதிலும் இதனை மேற்கொண்டு கிறிஸ்தவ சாயலுடன் கூடிய மானிடம் தழுவிய ஒரு பொதுமைக் கோட்பாட்டினை ஒரு சில கிறிஸ்தவ நாவலாசிரியர்கள் முன்வைத்துள்ளனர்.

## 6. விழிப்புணர்வின் அடிப்படைகள்

கிறிஸ்தவ நாவலாசிரியர்களால் எழுதப்படும் நாவல்களிலும், கிறிஸ்தவரல்லாதோர், கிறிஸ்தவ பாத்திரங்களை மையமாகவைத்து எழுதுகின்ற நாவல்களிலும் கிறிஸ்தவ விழுமியங்கள், ஆழமாகவோ அன்றேல் மேலோட்டமாகவோ தெளிக்கப்படுகின்றன. வாழ்வோடு இணையாத வழிபாடும், சமயசடங்குகளும் வலிமையற்றவை, வழி பிறழ்ந்தவை என்பது கிறிஸ்தவததின் அடிப்படை நம்பிக்கைகளில் ஒன்று. எனவே சமயம், சமுதாயத்தோடு நெருங்கி அந்த சமுதாயத்தை நெறிப்படுத்தக்கூடிய வழிமுறைகளைக்காட்டி சமத்துவம், சகோதரத்துவம், ஒருமைப்பாடு போன்ற அடிப்படை மானிடநேயக் கோட்பாடுகளை வளர்க்கக்கூடிய விழிப்புணர்வைத் தூண்டும்போது, அச்சமயம் சமுதாயத்தில் உயிரும், உறுதியும் பெறுகின்றது. டேவிற் சித்தையா, சாமிமுத்து, டீ செல்வராஜ், ஐசக் அருமைராஜன் போன்றோர் இத்தகைய சமய சமுதாய உறவினை மனங்கொண்டே தமது நாவல்களைப் படைத்திருக்கின்றனர். இந்த நாவலாசிரியர்களால் தீட்டப்பட்ட கதாபாத்திரங்கள் நிஜவாழ்வின், நிகழ்கால வாழ்வின் பிரதிபலிப்புக்களாகவே சித்தரிக்கப்பட்டிருக்கின்றனர். சமுதாயப் பிரச்சினைகளை இனங்காட்டும் பாத்திரங்களை உருவாக்கும்போது. அவை உதிரியான தனி மனிதனின் பிரச்சினை என்று கொள்ளாது ஒரு சமுதாயத்தின் மாறவேண்டிய, மாற்றப்படவேண்டிய சூழ்நிலைகளின் வெளிப்பாடாகவே அவை காட்டப்பட்டிருக்கின்றன. சமய நம்பிக்கைகளும், சித்தாந்தங்களும் கோட்பாடுகளும்கூட தனிமனித ஈடேற்றத்திக்காகத் தரப்பட்ட தத்ருபங்களல்ல, அவை ஆலயங்களிலும் ஆன்மீக அந்தரங்களிலும் வைத்து பூசைசெய்யப்பட வேண்டிய பரிசுத்த பொக்கிஷங்களுமல்ல, சமயம் சமுதாய வாழ்வோடு இணையும்போதுதான் உயிரும் உறுதியும் பெறுகின்றது என்றும், வாழப்படாதசமயம் வலுவிழந்த பக்தர்களையே பிரசவிக்கும் என்பதனையும் ஐசக் அருமைராஜன் மிகவும் இறுக்கமாகவும் இயல்பாகவும் கூறிநிற்கின்றார். ''ஆத்துமாக்களுக்குச் சோறிடும் கிறிஸ்தவர்களே! நீங்கள் சமுதாயத்துக்குள்ளும் இறங்கிவாருங்கள். நீங்கள் இந்த நாட்டுக்குச் செய்யவேண்டியது

நிறைய இருக்கிறது. உங்களிடம் இந்த நாடு அதிகம் எதிர்பார்க்கிறது'' என்ற கருத்து முழக்கமும் ''ஓங்க தலைமுறை போலி கிறிஸ்தவங்களா வாழ்ந்துற்றிய எங்கள் தலைமுறையையாவது சரியான கிறிஸ்தவங்களா வாழவிடுங்க''18 என்ற புரட்சிப்போக்கும் இத்தகைய விழிப்புணர்வின் எதிரொலியாகும்.

கிறிஸ்தவ நாவல் இலக்கியத்தை அண்மைக் காலத்திலெழுந்த மனுமுதற் கோட்பாடுகளும், மானுடம் தழுவும் தத்துவங்களும் ஏதோ ஒரு வகையிலும், அளவிலும் ஆற்றுப்படுத்தி வருகின்றன. கிறிஸ்தவ சமயத்தின் நடைமுறை வாழ்வில் எழும் முரண்பாடுகளும், தோல்விகளும், வாழ்வுக்கும், வழிபாட்டுக்கும் இடையிலான இருகிளைப்பாடும், இன்னும் அறிவியல் சமுதாயத்தில் அர்த்தமற்ற சடங்குகள் - சம்பிரதாயங்களின் ஏனோ தானோ என்ற போக்கும் இந்த நாவல்களினூடாக கிறிஸ்தவ சமயம் ஒரு புதிய பாதையை வகுக்க சவால்களாக அமைகின்றன. சமயம் என்பது ஆன்மிக தேவைகளைப் பூர்த்தி செய்ய அமைக்கப்பெற்ற ஒரு நிறுவனம் என்றும்' பல தரப்பட்ட நம்பிக்கைகள், பக்தி முயற்சிகள், வழிபாட்டு அனுசாரங்கள் ஆகியவற்றின் தொகுப்பு என்றும் கருதிய காலம் மறைந்து மதத்தின் சமுதாயச் சார்பு புதிய வேகத்துடன் இவர்களின் எழுத்துக்களின் வழியாக முன்கொணரப்படுகிறது. இந் நூற்றாண்டின் கடைக்காலில் ஆரம்பித்து இன்று கிறிஸ்தவ இறையியல் சிந்தனையில் புதிய அழுத்தத்தைக் கொடுத்துவரும் விடுதலையின் இறையியல் (Theology of Liberation) தென் அமெரிக்காவில் ஆரம்பித்த போதிலும் இதன் எதிரொலிகள், இந்தியாவில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள தென்பது கிறிஸ்தவ சிந்தனையாளர்கள் ஏற்கும் ஓர் உண்மையாகும். மனித உரிமைப் பிரச்சினைகள், வர்க்கப் பிளவுகள் அநீதியான சமுதாய அமைப்புகள் ஆகியவற்றினால் ஒதுக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் நசுக்கப்பட்டும் வந்த மக்களின் கண்ணீராலும் குருதியினாலுமே இந்த இறையியல் எழுதப்பட்டது. கற்பனைகளையே நாணச் செய்யும் வகையில் அங்கு யதார்த்தப்பண்பு விஞ்சி நிற்கின்றது. மக்களின் பிரச்சினைகளை, கண்ணிரை, செந்நீரைப் பின் புலமாகக் கொண்டு எழுதப்பட்டமையினால் இவ் இறையியல் உயிரும் சதையும் நிறைந்ததாக வளர்கிறது.

தமிழ் கிறிஸ்தவ நாவலாசிரியர்கள் விடுதலை இறையியலை அறிவு பூர்வமாக ஆதரித்து உணர்ந்து ஏற்று இத்தகைய நாவல்களை எழுதினார்கள் என்பதல்ல நமது வாதம். ஆனால் இன்றைய சமுதாய சூழலில் சமரசம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற விழுமியங்களையும் அதை ஒட்டிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான சமுதாய - வரலாற்றுத் தேவைகளையும் இவர்கள் அனுபவ ரீதியாகவும் உள்ளுணர்வினாலும் ஏற்று செயற்பட்டார்கள் என்பதே எமது கருத்து. விவிலியம் காட்டும் கடவுள் - ஏழை - எளியவர்கள் மீது பாரபட்சமுள்ளவர் என்பதே 'விடுதலை இறையியலின் அடிப்படைக் கருதுகோள் என்பதனை இங்கு மனங்கொள்ளுதல் வேண்டும்.

தொன்றுதொட்டு இன்றுவரை எழுதப்பெற்ற ஆங்கில இலக்கியங்களில் ஏதோ ஒரு வகையில், கிறிஸ்தவர்களின் வேதாகமவாடை தவிர்க்க முடியாததொன்று போல் வந்து சேர்ந்து விடுகின்றது என்பது இலக்கிய

ஆய்வாளர் ஒருவரின் கருத்து.[19] இது கிறிஸ்தவத் தமிழ் நாவல்களின் பொருளடக்கத்துக்கும் பொருந்துமெனலாம். கிறிஸ்தவத் தமிழ் நாவல்கள் வேதாகம விழுமியங்களை முன்வைக்கும் அதேவேளை இச்சமயத்தின் நாளாந்த வாழ்வை ஒட்டிய நடைமுறை நிலைப்பாடுகளை பரிசோதிக்கும் தளங்களையும் ஏற்படுத்துகின்றன. அதாவது இந்நாவல்கள் தாம் கொண்டிருக்கும் கருத்து நிலைப்பாடுகள் வழியாக சமயத்தைப் புணருத்தாரணம் செய்யும் அதேவேளயில் கிறிஸ்தவ சமய விழுமியங்கள் இந்நாவல்களின் சீரிய சமுதாய நோக்கிற்கு உயிரும் உரமும் தருகின்றன.

இறுதியாக, கிறிஸ்துவின் ''நற்செய்தி'' விழுமியங்களை ஆதாரசுருதியாகக் கொண்டு அதனூடாக மானிட மாண்பையும், அதனை நெறிப்படுத்தும் பண்பாட்டுக் கூறுகளையும் வளம்பெறச்செய்து, யதார்த்த உணர்வோடு, சமுதாயத்தின் வளர்ச்சித் திசையை நோக்கிய மாற்றத்திற்கு வழிசமைத்துக் காட்டும் நாவல்களே ''கிறிஸ்தவம்'' என்ற பெயரடையப்பெறத் தொடங்குகின்றன. இந்த விளக்கத்தின் ஒளியில் டேவிற் சித்தையா ஆக்கிய 'சிறைச்சாலை என்னசெய்யும்'' ஒரு கிறிஸ்தவநாவல் எனக் கூறுவோமாயின் ஜெயகாந்தனின் ''யாருக்காக அழுதான்'' குறு நாவலையும் ஒரு கிறிஸ்தவப் படைப்பு எனப் பாராட்டுவதில் அபிப்பிராயபேதம் இருக்கமுடியாது. இத்தகைய நாவல்களின் கதாபாத்திரங்கள் வாழ்வு நெறிகளின் அடிப்படையில் வெளிப்படையாகவோ, உள்நிலையிலோ சமய விழுமியங்களால் உந்தப்படும் ஓர் உலக நோக்கினைக் கொண்டிருப்பது புலனாகும். தனி மனித, குடும்ப, சாதி, சமூக, இன நிலைகளில் சித்தரிக்கப்படுகின்ற இப்பாத்திரங்கள் தமது வளர்ச்சிக்குப் பாதகமான சூழ்நிலைகளை மாற்ற விளையும்போது அது விழிப்புணர்வைத் தூண்டி மாற்றத்தைத் துரிதப்படுத்தும் போராட்ட களமாக ஆகின்றது.

சமுதாய விழிப்புணர்வும், சமயக்குழும ஒருமைப்பாட்டுணர்வும் சமூக நலம் பேணலும், கிறிஸ்தவ சமயத்தின் இலட்சிய ரீதியான விழுமியங்களாகும். இவை தவிர, சமத்துவம், சகோதரத்துவம் ஆதிய மானிடப் பண்புகள் சாதி, இன, மத, நிற, மொழி வேறுபாடுகளை விலக்கிய நிலையில் பேணப்படல் வேண்டுமென்பது கிறிஸ்தவ வாழ்வு - வழிபாட்டுக் கோட்பாடுகளின், உள்ளீடாகவுமுள்ளது. மாதவையரின் ''கிளாரிந்தா'' முதல், டீ. செல்வராஜாவின் ''மோசே'' வரை, ஒரு சமுதாயத்தின் வரலாற்று ஓட்டத்தில் ஏற்படும் சீர்கேடுகளைச் சந்தித்து சமர்புரியும் சமூகப் பிரதிநிதிகளாகவே படைக்கப்பட்டுள்ளனர். கிறிஸ்தவ விழுமியங்களைப்பற்றி வெளிப்படையாக இத்தகைய பாத்திரங்கள் எப்போதுமே பேசவில்லையாயினும், அந்த விழுமியங்களால் இவர்களது வாழ்வும் சமுதாய நோக்கும், விழிப்புணர்வுப் போக்கும் உந்தப்படுகின்றது என்ற உண்மை கூர்ந்து நோக்கின் புலனாகும்.

## குறிப்புகள்

1. See. K. Meenakshisundarm *The contribution of European Scholars to Tamil, University of Madras*, 1974. *pp.* 370. இந்நூலில் தமிழ் இலக்கிய இலக்கணப் பரிமாண வளர்ச்சியில் ஐரோப்பியக் கிறிஸ்தவ அறிஞர்களின் பங்களிப்புப்பற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

2. இக்கட்டுரையில் ''கிறிஸ்தவம்'' என்ற பதம் கத்தோலிக்க பிரிவை உள்ளடக்கிய ஏனைய கிறிஸ்தவ சபைகளையும் ஒருமித்துக் குறிக்கும் பொதுப் பதமாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

3. காண்க, ச. செந்தில்நாதன் ''டி. செல்வராஜின் மலரும் சருகும்'' விடுதலைக்குப்பின் தமிழ் நாவல்கள், கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை, *1974*, பக். *93-97* க. கைலாசபதி, இலக்கியச் சிந்தனைகள், குமரன் அச்சகம், கொழும்பு - *1983* பக்கம் *110, 113-116* சரவணபவானந்தர், முத்தமிழ் வித்தகர் வேதநாயகம்பிள்ளை வாழ்க்கை விளக்கம், தமிழிலக்கியக் கழகம், தூத்துக்குடி - *1970*, பக்கம் *4-17* மா. இராமலிங்கம், இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம், தமிழ்ப் புத்தகாலயம் சென்னை - *1973* பக்கம், *49-50*.

4. காண்க பிரதாப முதலியார் சரித்திரம், சக்தி வெளியீடு, சென்னை, *1957*, பக்கம் *11*

5. கோவைகளும், பிரபந்தங்களும் - தலபுராணங்களும் இலக்கியங்களாக விளங்கிய காலத்தில் இவ்வுரை நடைநவீனம் வெளிவந்தமையாலும், சமுதாயத்தின் பலவீனங்களைக் கற்பனை வளத்தோடு பிரதிபலித்தமையினாலும், காலத்துக்கேற்ற ரசனைப் பண்பினைக் கொண்டிருந்தமையினாலும், இந்நாவல் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது. See. R. DHANDAYUDHAM, A *Study of the Sociological Novels in Tamil*, University of Madras - 1977, pp 21-24

6. See. R. DHANDAYUDHAM, *A Study of the Sociological Novels in Tamil......*, pp. 1 - 2.

7. காண்க, R Dhandayudham, *op. cit*, pp. 1 - 11
க. கைலாசபதி இலக்கியச் சிந்தனைகள் ... பக். *105*
மா. இராமலிங்கம் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் ... பக் *21-22*

இவற்றுடன்
மலரும், சருகும், என்ற தனது நாவல்பற்றி டீ. செல்வராஜ் தரும் சில கருத்துக்கள் இதற்கு ஆதாரமாக உள்ளன.
''நான் சமுதாயத்தை இயக்கபூர்வமாகப் பார்க்கிறேன், எனவேதான் எனது நாவலில் இன்றைய சமூக அமைப்பில் காணப்படும் கேடுகெடும் புகளுக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைத்து உன்னதமான ஒரு சமூக அமைப்பில் உருவாக்கும் வல்லமை படைத்த சக்தி எதுவோ அதற்கு முக்கியத்துவம் கொடுத்து அந்த இயக்கப் போக்கைக் கோடிட்டுக்

காட்டியுள்ளேன். இது சமுதாய வளர்ச்சி விதி. இந்த இயற்கைவிதிக்கு இந்திய சமுதாயம் விதிவிலக்காக இருக்க முடியாது''
தி. பாக்கியமுத்து (பதிப்பாசிரியர்) விடுதலைக்குப்பின் தமிழ் நாவல்கள் கிறிஸ்தவ இலக்கிய சங்கம், சென்னை - 1974 பக்கம், 100

8. க. கைலாசபதி, தமிழ் நாவல் இலக்கியம்
பாரி நிலையம், சென்னை - 1968 பக்கம் 15-39
க. கைலாசபதி, இலக்கியச் சிந்தனைகள் ......
பக்கம் 110, 116, 138 - 143
தி. பாக்கியமுத்து, விடுதலைக்குப்பின் தமிழ் நாவல்கள் ...
பக்கம், 98 - 102

9. கா. சிவத்தம்பி, தமிழ் இலக்கியத்தில் மதமும், மானிடமும், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை - 1983, பக் 7.

10. சென்னை, இலக்கிய நண்பர் வட்டத்தின் பத்துக்கும் மேற்பட்ட நாவல் இலக்கிய ஆய்வரங்குகளில் வாசிக்கப்பெற்ற ஆய்வுக்கட்டுரைகள் அடங்கிய நூல்களில் சிலவற்றை இங்கு குறிப்பிடலாம்.

வளரும் தமிழ் இலக்கியம், *(1969)*;
இன்றையத் தமிழிலக்கியத்தில் மனிதன், *(1972)*;
விடுதலைக்குப் பின் தமிழ் நாவல்கள், *(1973)*;
தமிழ் நாவல்களில் மனித விமோசனம் *(1974 - 75)*;
இலக்கியத்தில் பெண்கள், (1976);
தமிழ் நாவல்களில் குடும்பசக்தி சமுதாயமாற்றம், *(1977)*;
நூற்றாண்டு தமிழ் நாவல் தரும் செய்தி, *(1978)*;
தமிழ் நாவலகளில் மனித உரிமைகளும், மக்கள் போராட்டமும், *(1980)*;

மேற்படி கட்டுரை நூல்கள் சென்னை, கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

11. காண்க, K. Kailasapathy, *The Relation of Tamil and Western Literatures*, Madurai Kamaraj University Madurai, 1984, pp, 2-24 also R. Dhandayudham, *A Study of the Sociological Novels in Tamil......* pp. 6-12.

12. க. கைலாசபதி, தமிழ் நாவல் இலக்கியம்......, பக். 25

13. சமயமாற்றம் பற்றிய சமூக - சமய பிரச்சினைகளை அடியொற்றி மாதவையரால் எழுதப்பெற்ற ''கிளாரிந்தா'' என்ற நாவலில் கிளாரிந்தர் பாய் என்ற மகாராஷ்ரிர மாநிலத்தை சார்ந்த பெண் கிறிஸ்தவளாக மதம் மாறி ஈற்றில் அவள் ஆற்றிய சமுதாயப் பணிகள்பற்றியும் கூறப்படுகிறது.

14. காண்க, தி. பாக்கியமுத்து. (பதிப்பாசிரியர்), விடுதலைக்குப்பின் தமிழ் நாவல்கள்...... பக். 88 - 97. பொ. ஆ. சத்தியசாட்சி, பாவலர் தமிழ் அமுது, மெய்ப்பொருள் அச்சகம், சென்னை 1981, பக். 99 - 107